ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2475/29 – 2026 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා – 2026.02.13
2475/29 ஆம் இலக்கம் – 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

இங்கே கீழே விபரிக்கப்பட்டுள்ள காணி ஒரு பொது விடயத்திற்குத் தேவை எனவும், அதனை காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எடுக்கப்படுமெனவும், காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில் மெத்தே மெதிலிய பத்துவ சிறு பிரிவில் இலக்கம் 09 கிரிவன்தெனிய கிராம அலுவலர் பிரிவில் கிரிவன்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் KE/RMB/2020/52 ஆம் இலக்க மற்றும் 2020.06.17 ஆம் திகதிய சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு ‘A’ – பன்சல் வத்த மற்றும் மொரகஹமுல வத்த – விஸ்தீரணம்: 0.0253 ஹெக்டயார்**

வடக்கு: பன்சல் வத்த, மொரகஹமுல வத்த மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: வீதி (பிரதேச சபை), பன்சல் வத்த, மொரகஹமுல வத்த; தெற்கு:பன்சல் வத்த, மொரகஹமுல வத்த; மேற்கு: பன்சல் வத்த, மொரகஹமுல வத்த.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4–3/5/2019/HA/555.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
மிஹிகத மெதுர,
இல. 1200/ 6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 19.

EOG 02–0101

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

இங்கு I இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் ஆதனத்தை காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிரார்கள் என்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் அறிவிக்கின்றேன். அந்த ஆதனம் எடுத்துக் கொள்ளப்படுவது எந்தக் காணியிலிருந்து என்பதனை II இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை

I. **ஆதனத்தின் விபரம் :** கண்டி வடக்கு - பாத்ததும்பரை ஒன்றிணைந்த நீர் விநியோக திட்டத்தின் கல்லெனவத்த சேவைத் தடாகம் வரையான விநியோக குழாய் பதிப்பதற்கு மற்றும் அங்கிருந்து விநியோக குழாய் அமைப்பதற்கான காணித்துண்டின் ஆதன உரித்தை எடுத்துக் கொள்ளல்.

II. **காணியின் விபரம் :** மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தின், தும்பனை பிரதேச செயலகப் பிரிவின், உட பலாத்த கிழக்கு கோரளை சிறு பிரிவின் கல்லெனவத்த (364) கிராம அலுவலர் பிரிவின் கல்லெனவத்த ஜனபதய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட MAHA/TMP/2021/673 மற்றும் 2021.12.21 ஆந் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பெயர்களினால் குறிக்கப்படும் மற்றும் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

01. **துண்டு 'A' – கல்லெனவத்த ஜனபதய– விஸ்தீரணம்: 0.0112 ஹெக்டயார்**

வடக்கு: படிக்கட்டு மற்றும் பிரதேச சபை பாதை; கிழக்கு: பிரதேச சபை பாதை மற்றும் எம். ஜீ. லீலாவதி உரிமை கோரும் கல்லெனவத்த ஜனபதய; தெற்கு:எம். ஜீ. லீலாவதி உரிமை கோரும் கல்லெனவத்த ஜனபதய பிரதேச சபை பாதை மற்றும் பிரதேச சபை பாதை; மேற்கு: பிரதேச சபை பாதை மற்றும் படிக்கட்டு.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4–3/18/2021/WS/161.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
மிஹிகத மெதுர,
இல. 1200/ 6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 19.

EOG 02–0102

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.